தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை

அனுப்புநர்–
பொறி.ச. அருணகிரி, எம்.இ., எம்.பி.ஏ.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,
வெள்ளாறு வடிநில கோட்டம்,
விருத்தாசலம் – 606001

பெறுநர்–
திரு.பிரகாஷ் சோரடியா,
த/பெ.தன்ரூப்மல் சோரடியா,
எண்.20 வைத்தியலிங்கம் தெரு,
நெல்லிக்குப்பம்,
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

கடித எண். /வபி/இவஅ1/கோ.41(A)/2023/நாள். .06.2023

ஐயா,

பொருள் :- கடலூர் மாவட்டம் - கடலூர் வட்டம் – வரக்கால்பட்டு கிராமம் - வெள்ளப்பாக்கம் ஏரி வடிகால் வாய்க்காலில் புல எண்.21/7-ல் குறுக்கே தனது சொந்த செலவில் சிறுபாலம் கட்டிக்கொள்ள அனுமதி கோரியது – நிபந்தனைகளுடன் அனுமதி வழங்குதல் - தொடர்பாக

பார்வை :-
1) திரு.பிரகாஷ் சோரடியா, த/பெ.தன்ரூப்மல் சோரடியா, எண்.20, நெல்லிக்குப்பம், பண்ருட்டி வட்டம், அவர்களின், நாளிடப்படாத விண்ணப்பம்.
2) இக்கோட்ட கடித எண்./வபி/இவஅ2/கோ.41(A)/2023/ நாள். 12.06.2023.
3) இக்கோட்ட கடித எண்./வபி/ இவஅ2/கோ.41(A)/2023/ நாள் . 15.06.2023.

⊙⊙⊙⊙⊙

கடலூர் மாவட்டம் & வட்டம், வரக்கால்பட்டு கிராமம் புல எண். 21/3-ல் செல்லும் இத்துறையின் பராமரிப்பில் உள்ள வெள்ளப்பாக்கம் ஏரி வடிகால் வாய்க்காலின் குறுக்கே புல எண்.21/7-ல் தங்களது சொந்த செலவில் சிறுபாலம் ஒன்று கட்டிக் கொள்வதற்கு நீர்வளத்துறையின் தற்காலிக அனுமதி பெறுவதற்கு செலுத்த வேண்டிய காப்புத் தொகை (Caution Deposit) மற்றும் குத்தகை தொகை (Lease Rent) ஆகியவைகளை செலுத்திய பின்னர் தாங்கள் இத்துறையுடனான உடன்படிக்கை ஒன்றில் 19.06.2023. -அன்று கையொப்பமிட்டுள்ளீர்கள். அவ்வுடன்படிக்கையின் நகலொன்று இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உடன்படிக்கை மற்றும் அதன் இணைப்பில் உள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும். தவறினால் தங்களுடனான இவ்வுடன்படிக்கையினை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

....2....


தங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை மற்றும் அதனுடனான நிபந்தனைகளின்படி கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம் – வரக்கால்பட்டு கிராமம் -வெள்ளப்பாக்கம் ஏரி வடிகால் வாய்க்கால் புல எண்.21/7-ன் குறுக்கே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைப்படத்திலுள்ள அளவுகளின்படி RCC-யினால் சிறுபாலம் ஒன்று தங்களது சொந்த செலவில் கட்டிக்கொள்ள முறையான தற்காலிக அனுமதி இதன் மூலம் வழங்கப்படுகிறது. உடனடியாக கடலூர், வெள்ளாறு வடிநில உபகோட்டம், உதவி செயற்பொறியாளரை நேரில் அணுகி விபரங்கள் பெற்று நீர்வளத்துறை அலுவலர்கள் முன்னிலையில் சிறுபாலத்தினை கட்டிக் கொள்ளுமாறும், சிறுபாலம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் உரிய விவரத்தினை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு:-
உடன்படிக்கை நகல் – 1

செயற்பொறியாளர், நீ.வ.து.
வெள்ளாறு வடிநில கோட்டம்,
விருத்தாசலம் - 606 001.

19/6/23

CONSTRUCTION OF CULERT AT VELLAPAKKAM SURPLUS COURSE OF VARAKALPATTU VILLAGE SURVEY NO- 21/7 IN CUDDALORE TALUK AND DISTRICT.



N

APPLICANT SIGNATURE	SPACE FOR APPROVAL
REGISTERED SIGNATURE	

ASSISTANT ENGINEER, W.R.D.,
IRRIGATION SECTION,
CUDDALORE.

ASSISTANT EXECUTIVE ENGINEER, W.R.D.,
VELLAR BASIN SUB DIVISION,
CUDDALORE - 607 001.